அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 02/2021(IX)

எனது இலக்கம் : EST-6/03/LEA/3381(විදේශ 1)

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2024.05.07

அமைச்சின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**COVID -19 தொற்றுநோய்க்கால கட்டத்தில் வெளிநாட்டிலிருந்து, நிலவிய சூழ்நிலை காரணமாக மீண்டும் பணியில் சேரத் தவறிய அரச உத்தியோகத்தர்கள் தொடர்பாக எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளல்**

COVID - 19 தொற்றுநோய்க்காலகட்டத்தில் வெளிநாட்டில் இருந்து COVID -19 தொற்று நிலை காரணமாக குறித்த திகதியில் பணிக்குத் திரும்பத் தவறிய அரச உத்தியோகத்தர்களது விடுப்பு தொடர்பாக பின்வரும் ஏற்பாடுகளின்படி செயலாற்ற. 2024.03.25 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(i) தாபனவிதிக்கோவையின் அத்தியாயம் XII இன் பிரிவு 14, 22 மற்றும் 23 இன் கீழ் வெளிநாட்டு விடுப்புப்பெற்று 2020 ஆம் ஆண்டு வரவேண்டியிருந்து 2020.12.31 அல்லது அதற்கு முன்னர் நாட்டுக்கு வந்து சேவையில் அறிக்கை செய்த உத்தியோகத்தர்களுக்கு அனுமதிக்கப்பட்ட விடுப்புக் காலத்திற்கு அப்பால் எடுக்கப்பட்ட விடுப்பினை ஊதியத்துடன் கூடிய வெளிநாட்டு விடுப்பாக அங்கீகரித்தல்.

(ii) தாபனவிதிக்கோவையின் அத்தியாயம் XII இன் பிரிவு 16 மற்றும் 36 இன் கீழ் வெளிநாட்டு விடுப்புப்பெற்று 2020 ஆம் ஆண்டு வரவேண்டியிருந்து 2020.12.31 அல்லது அதற்கு முன்னர் நாட்டுக்கு வந்து சேவையில் அறிக்கை செய்துள்ள உத்தியோகத்தர்களுக்கு அனுமதிக்கப்பட்ட விடுப்புக் காலத்திற்கு அப்பால் எடுக்கப்பட்ட விடுப்பினை ஊதியமற்ற வெளிநாட்டு விடுப்பாக அங்கீகரித்தல்.

(iii) 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வரவேண்டியிருந்து 2020.12.31 ஆந்திகதிக்குப் பின்னர் மற்றும் 2021.12.31 ஆந்திகதி அல்லது அதற்கு முன்னர் நாட்டுக்கு வந்து சேவையில் அறிக்கை செய்துள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும்போது நாட்டுக்கு வருவதற்கு உத்தியோகத்தரால் போதுமான முயற்சிகள் செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தும் ஆவணங்களை சமர்ப்பித்துள்ள உத்தியோகத்தர்களுக்கு அனுமதிக்கப்பட்ட விடுப்புக் காலத்திற்கு அப்பால் எடுக்கப்பட்ட விடுப்பினை ஊதியமற்ற விடுப்பாக அங்கீகரித்தல்.

அதன்போது, விமான நிலையம் மூடப்பட்டிருந்தமை அல்லது விமான பயணத் தவணைகள் ரத்து செய்யப்பட்டமை என்பவற்றுக்கான ஆவணங்களை விடுப்பு அங்கீகரிக்கும் அதிகாரியிடம் சமர்ப்பித்த பிறகே முறையாக விடுமுறை அனுமதியை பெற வேண்டும். மேற்படி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும்போது விடுப்புப்பெறும் உத்தியோகத்தரால் அல்லது சேவை செய்யும் நிறுவனத்தின் தலையீட்டின் மூலமாகப் பெறப்பட்டிருக்க வேண்டும்.

(iv) 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வரவேண்டியிருந்து 2021.12.31 ஆந்திகதி அல்லது அதற்கு முன்னர் நாட்டுக்கு வருகை தந்து சேவைக்கு அறிக்கை செய்துள்ள மேற்கண்ட தொடர் இலக்கம் (ii) மற்றும் (iii) இல் முன்மொழியப்பட்டவாறு விடுப்பு அங்கீகரிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அக்காலப்பகுதியை சம்பள ஏற்றம், தடையின்றிய பதவி உயர்வுகள், சேவை மூப்பு மற்றும் ஓய்வூதியத்துக்குப் பாதிப்பு ஏற்படாத முனைப்பான சேவைக்காலமாகக் கருதுதல்.

(v) 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வருகை தரவிருந்து 2022 ஆம் ஆண்டில் அல்லது அதற்குப் பின்னர் சேவைக்கு அறிக்கை செய்துள்ள உத்தியோகத்தர்களுக்கு ஊதியமற்ற விடுப்பை அங்கீகரிக்கவும், ஊதியமற்ற விடுப்புக் காலத்தை சம்பள ஏற்றம்,தடையில்லாப் பதவியுயர்வு, சேவை மூப்பு மற்றும் ஓய்வுதியத்துடன்தொடர்பு படாத சேவைக்காலமாகக் கருதுதல்.

(vi) தொடர் இலக்கம் (i), (ii), (iii) மற்றும் (v) ஆகியவற்றின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தாபனவிதிக்கோவையின் அத்தியாயம் XII இன் பிரிவு 14 மற்றும் 16 இன் கீழ் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு விடுப்புக் காலத்திற்கு அப்பால் பெற்றுள்ள வெளிநாட்டு விடுப்பு அவ் உத்தியோகத்தர்களின் கட்டாய சேவைக்காலத்தைப் பாதிக்காத வகையில், அங்கீகாரம் வழங்கல்.

(vii) முறையான விடுமுறை அனுமதியின்றி பணிக்கு அறிக்கையிட்டிராமையின் காரணமாக சேவை நீக்க அறிவித்தலை இதுவரை வெளியிட்டிராத சகல உத்தியோகத்தர்களுக்கும் பதவியை கைவிட்டுச் செல்வதற்கான அறிவித்தலை வெளியிடுதல்.

02. அனைத்து நிறுவனங்களின் தலைவர்களும் மேற்படி ஏற்பாடுகளுக்கு இணங்க செயலாற்ற இணங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

ஒப்பம்/பிரதீப் யசரத்ன
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி : 0112-699399
தொலைநகல் : 0112-692158
மின்னஞ்சல் முகவரி: ade-vi@pubad.gov.lk